DINAKARAN – 28.1.2010

# புள்ளியியல் துறையில் மென்பொருள் பயன்பாடு குறித்த கருத்தரங்கு

கோவை,ஜன.28:பாரதியார் பல்கலைக்கழக புள்ளியியல் துறை சார்பில் 'புள்ளியியல் துறையில் மென்பொருள் பயன்பாடு குறித்த இரண்டு நாள் கருத்தரங்கு பல்கலைக்கழக அரங்கில் வரும் பிப்ரவரி 18, 19 ம் தேதிகளில் நடக்கிறது.. பல்கலைக்கழக துணைவேந்தர் சுவாமிநாதன் 18 ம் தேதி காலை 10 மணிக்கு கருத்தரங்கை துவக்கி வைக்கிறார். தமிழ்நாடு திட்டக்குழு ஐ.எஸ்.எஸ் பிரிவு தலைவர் பாஸ்கரன், புள்ளியல் துறை வல்லுனர்கள் முனைவர் ராகவன், முனைவர் சந்திரசேகரன், முனைவர் முத்து மற்றும் பலர் பங்கேற்கின்றனர். இரண்டாம் நாள் மாலை பல்கலைக்கழக பதிவாளர் திருமால்வளவன் கருத்தரங்கை நிறைவு செய்து பேசுகிறார். பல்கலைக்கழக புள்ளியியல் துறைத்தலைவர் சுரேஷ் இத்தகவலை தெரிவித்துள்ளார்.